**செ.வெ. எண்: 467** **நாள்: 20/07/2011.**

<u>மாண்புமிகு தமிழக முதலமைச்சர்</u>
<u>புரட்சித் தலைவி **அம்மா** அவர்களின் ஆணைக்கிணங்க</u>
<u>மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்</u>
<u>திரு.**செல்லூர் கே.ராஜூ** அவர்கள் தலைமையில்</u>
<u>அனைத்து மண்டல இணைப்பதிவாளர்கள் மற்றும்</u>
<u>மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தனி அலுவலர்களின் ஆய்வுக் கூட்டம்</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க இன்று (20.7.2011) , மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள் தலைமையில், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய கூட்ட அரங்கில், அனைத்து மண்டல இணைப்பதிவாளர்கள் மற்றும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தனி அலுவலர்களின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

அப்போது மாவட்டங்களில் உள்ள பொதுவிநியோகத் திட்ட செயல்பாட்டின் மேம்பாட்டிற்காக தொடர வேண்டிய மேல் நடவடிக்கைகள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் இலவச அரிசி விநியோகத்திட்டத்தின் செயல்பாடுகள், பயிர்க்கடன் வழங்குதல், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின பிரிவினருக்கு பயிர்க்கடன் வழங்குதல், நகைக்கடன் வழங்குதல், சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்குதல், வைப்புத் தொகை சேகரிப்பதில் முன்னேற்றம், மாற்றுத் திறனாளிகளுக்கு கடன் வழங்குதல், பொதுச் சேவை மையங்கள், வேளாண் மருத்துவ பயன்பாட்டு மையங்கள் மற்றும் வேளாண் சேவை மையங்களின் செயல்பாடுகள், கடன் வசூலில் ஏற்பட்ட முன்னேற்றம், விதைகள் விற்பனை குறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட்டது.

ஆய்வுக்குப் பின்னர், பயிர்க்கடன் வழங்குதல், வைப்புநிதி சேகரித்தல், கூட்டுறவு வங்கிகள் மக்களுக்கு சேவை புரியும் பொருட்டு முழுமையாக கணினிமயமாக்கப்பட வேண்டும் மற்றும் பல்வேறு கடன்கள் வழங்குதலில் நிர்ணயிக்கப்பட்ட குறியீடுகளை எய்த வேண்டும் எனவும், இலவச அரிசித் திட்டத்தில் எவ்வித குறைபாடுகளுமின்றி செயல்பட வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலாளர் திரு.யத்தீந்திர நாத் ஸ்வேன், இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு.ப.அண்ணாமலை, இ.ஆ.ப., மற்றும் கூடுதல் பதிவாளர்கள் திரு.ந.அசோகன், திரு.அ.சங்கரலிங்கம், திரு.இரா.ராஜேந்திரன், திரு.இரா.ஜெயராம், திரு.க.மா.தமிழரசன், திரு.ம.ப.சிவன் அருள், மண்டல இணைப்பதிவாளர்கள் மற்றும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் தனி அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**